4th March 1969]

அவர்களுக்கு அங்கே இன்னொரு பள்ளி வந்துவிட்டதே என்ற கவலையிருந்தால் அந்தப் பள்ளி எப்படி நடக்கிறது என்று பரிசீலித்துப் பார்த்து அது தேவையா இல்லையா என்ற முடிவை அதிகாரிகள் சொன்னால் அதற்குப் பின்னால் யோசிக்கலாம்.

திரு. வி. தங்கபாண்டியன்: ராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி என்ற ஊரில் சர்க்கார் உயர்நிலைப் பள்ளி ஒன்று 800 மாணவர்களைக் கொண்டு சிறப்பாக நடந்து வந்தது. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் தனிப்பட்ட சமூகத்தாரை ஆதரிப்பதற்காக தனியார் பள்ளிக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. அதனால் அங்கே சர்க்கார் பள்ளி நடைபெறுவது தடைபட்டிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியால் தடையாக இருக்கும்படி செய்யப்பட்ட அந்தத் தனியார் பள்ளியை ரத்து செய்துவிட்டு அரசாங்கப்பள்ளி சீராக நடைபெற அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: அரசியல் நோக்கம் பள்ளிகளில் நுழைவது வளர்ந்துகொண்டே போகிறது. இந்த சர்க்கார் இதைத் தடுக்கும்.

Tamil Pandits.

* 114 Q.—Thiru G. KRISHNAMOORTHY: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether Tamil Pandits with fifteen years of service are treated as Grade I Pandits with eligibility for Grade I scales of salary?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: ஓரியண்டல் பட்டம் என்னும் குறைந்த அளவு கல்வித் தகுதி பெற்றவர்களாக 1—1—1948 தேதியன்று பணியிலிருந்த பண்டிதர்கள் மட்டுமே இந்த நன்மை பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாவர்.

Thiru G. KRISHNAMOORTHY: Have the Government examined the proposal to give to such of those Pandits as have the general educational qualification of S.S.L.C. and Pandit's training or secondary grade training this I Grade salary though they may handle the lower classes?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: ஜனவரி 1, 1948 தேதியில் இருந்த ஆசிரியருக்கு விதிவிலக்கு கொடுத்தது. அந்த 15 ஆண்டு சர்வீஸ் இருந்தால் அல்லது சர்வீஸ் இல்லாவிட்டாலும் கூட அந்தத் தேதியில் உத்தியோகத்தில் இருந்து அதற்குப் பின்னால் 15 ஆண்டு எப்போது முடிக்கிறார்களோ அதற்குப் பின்னால் இந்த எக்சம்ஷன் கொடுக்கப்பட்டது. இப்போது பல விதிகள் உள்ளன. தமிழ் பண்டிட் கிரேடு 1-க்கு படிப்பு வேறு இருக்கிறது. அது ஒரு பிரிவு. கிரேடு 2-க்கு பிரிவு ஒன்று இருக்கிறது. அதைத்தான் நாம் பின்பற்றுகிறோம். எக்செம்ஷன் கொடுத்துக் கொண்டே போனால் குவாலிபிகேஷனுக்கே மதிப்பில்லாமல் போகும்.

[4th March 1969

THIRU G. KRISHNAMOORTHY: Sir, are the Government aware that the Tamil Pandits themselves do not expect this exemption from qualification to be granted to them but in Tamil Nadu they expect to be paid First Grade salary, if they have passed the required examinations prescribed under the present rules? Though they handle lower classes, they have acquired higher qualifications, they are Vidwans and Pandits trained and therefore they expect the higher salary, the first grade salary, and they have also represented to the Government that they must be paid according to their qualifications and not according to the classes handled by them. Being Tamil Nadu where we want to encourage Tamil and bring it as the official language of the State which can only be achieved by the Tamil Pandits, have the Government any proposals to give salary to the Pandits according to the qualifications prescribed and enforced under the rules on this day?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: இது ஒரு பொதுப் பிரச்னை ஆசிரியர்களிடத்தில். ஒவ்வொன்றுக்கும் ஒரு குவாலிபிகேஷன் வைத்திருக்கிறோம். இன்னொரு குவாலிபிகேஷன் இருக்கிறது என்பதால் அந்த சம்பளத்தைத் தரவேண்டுமென்று கேட்கிற நிலையிருக்கிறது. அவ்வப்போது அவை பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கவேண்டும். பொதுவாக உத்தரவு போட்டால், குறைந்த குவாலிபிகேஷன் இருக்கும்போது, கூடிய குவாலிபிகேஷன் இருப்பவர்கள் தங்களுக்கு ஏற்ற சம்பளம் கேட்பது அவ்வளவு சரியாக இல்லை என்று நினைக்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: தலைவர் அவர்களே, 1—1—1948-ல் ஆசிரியராக, தமிழ் பண்டிதராக இருந்திருந்தவர்கள் புதுக் கல்வித் தகுதி குறைவாக இருந்தாலும் எஸ்.எஸ்.எல்.சி. டிரெயினிங் இல்லாமல் வித்வான் மட்டும் இருந்தாலும் முதல் கிரேடு கொடுக்கவேண்டுமென்று விதிவிலக்களித்தார்கள். இந்த வினவில் கேட்பதுபோல முதல் தர தமிழ்பண்டிதர்கள் முதல் கிரேடு சம்பளம் வாங்கும் உரிமை அன்றி, எம்.ஏ. பட்டதாரி களுக்கு இரண்டு இன்கிரிமெண்ட் கொடுப்பதைப்போல இவர் களுக்கும் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: முன்பே விளக்கினேன். ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு தகுதி போடுகிறோம். குறைந்த குவாலிபிகேஷன் உள்ளவர்களுக்குக் குறைந்த வேலையாகக் கொடுக்கிறோம். அதிகமான குவாலிபிகேஷன் உள்ளவர்கள் தனக்கு அதிகமாக இருக்கிறதே என்பதற்காக அதிகப் பணம் தரவேண்டுமென்று இன்கிரிமெண்ட் கேட்டால் பொதுவாக ஒப்புக்கொள்ள முடியாது. குறிப்பிட்டு எழுதி அனுப்பினால் பரிசீலிக்கலாம்.

THIRU G. KIISHNAMOORTHY: Sir, will the Government assure the Pandits that if they possess over and above the minimum qualifications prescribed for the post, they will also be

4th March 1969]

given the benefit, which was just given by the Government through their last Budget, namely, grant of two advance increments?

THE HON THIRU S. MADHAVAN : The hon. Memeber may put a separate question.

"*Manora*".

* 115 Q.—THIRU N. SUNDARESA THEVAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that numerous people daily visit the ancient monument "Manora" in Pattukkottai taluk of Thanjavur district; and

(*b*) whether there is any proposal to develop this place as a tourist resort?

"மனோரா"

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை தாலுகாவில் உள்ள "மனோரா" என்ற புராதன சின்னத்தைத் தினமும் ஏராளமான பார்வையாளர்கள் பார்த்துச் செல்லுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) இதை சுற்றுலாவிற்கு உகந்த இடமாக அபிவிருத்தி செய்யும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. என். சுந்தரேசத் தேவர் : கிழக்குக் கடற்கரை ரஸ்தா அபிவிருத்தித் திட்டம் செயல்படும் நேரத்தில் மதுரையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் பாதையில் மையமாக 'மனோரா' இருப்பதால் அந்தப் புராதன சின்னத்தை அதிகமான பேர்கள் கண்டு செல்வதாலும் சிறப்பான இடமாக இருப்பதாலும் இனிமேலாவது அதை முன்னேற்றம் செய்ய திட்டம் ஏற்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : கிழக்குக் கடற்கரை சாலை அமைக்கப்பட்டு அது நிறைவேற்றப்படும்போது பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கவனத்தில் அதை வைத்துக்கொள்வார்கள்.

திரு. வி. தங்கபாண்டியன் : 'மனோரா' பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர் கதை ஒன்றில் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு முக்கியத்துவம் கொடுத்து எப்போதும் பொதுமக்கள் காண்கிற வகையில் Beauty spot ஆக வைக்க அரசு முயற்சிக்குமா?